டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 2.06.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 285 - Madurai | Online Edition

# இந்திய வேளாண்மை துறையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு

## ஒன்றிணைந்த 22 மாநில வேளாண் அமைச்சர்கள்

புது தில்லி, ஜூன் 1

இந்திய வேளாண் துறையில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க முதல் நிகழ்வாக, நாட்டின் முதன்மையான வேளாண்மை ஆராய்ச்சி மையங்களில் ஒன்றான புதுதில்லியில் உள்ள புசா வளாகத்தில் மே 28-29 தேதிகளில் நடைபெற்ற இரண்டு நாள் தேசிய காரீஃப் மாநாட்டின் போது, 22 மாநிலங்களின் வேளாண் அமைச்சர்கள் ஒரே மேடையில் ஒன்று கூடினர். ஒருங்கிணைந்த நடவடிக்கை மற்றும் திறமையான செயலாக்கத்தின் மூலம் விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் விவசாயத் துறையை வலுப்படுத்துவதற்கும் ஒரு கூட்டு உறுதிமொழியுடன் இந்த மாநாடு முடிவடைந்தது.

வழக்கமான ஆய்வுக் கூட்டத்தை விட மேலாக, இந்த மாநாடு உறுதிப்பாடு, ஒருங்கிணைப்பு மற்றும் கள மட்டத்தில் செயல் படுத்துவதற்கான ஒரு தேசிய தளமாக உருவெடுத்தது. மத்திய வேளாண்மை, விவசாயிகள் நலன் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகானின் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் மாநாட்டில், மாநில வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறைகளின் மூத்த அதிகாரிகளிடையே விரிவான விவாதங்கள் நடைபெற்றன. இரண்டாம் நாளில், மாநில வேளாண் அமைச்சர்கள் மாலை வரை தொடர்ந்த ஒரு முன்னோடியான நீண்ட விவாதத்தில் ஈடுபட்டிருந்தபோது, சவுகான் நிகழ்வுகள் முழுவதும் கலந்து கொண்டார். அவர்கள் ஒருங்கிணைந்து, முக்கிய பிரச்சினைகள் உட்பட ஒரு பொதுவான செயல்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# அரியலூர் மாவட்டத்தில் உர மொத்த விற்பனையாளர்களுக்கும் உரம் வழங்கும் கம்பெனி அலுவலகங்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது



அரியலூர், ஜூன் 1

அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக் கனியின் தலைமையில் மொத்த விற்பனையாளர்கள் மற்றும் உரம் வழங்கும் கம்பெனி அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை உதவி இயக்குனர்கள் சாந்தி, ஜென்சி, ராதிகா, பரமசிவம் மற்றும் வேளாண் அலுவலர் சதீஷ் மற்றும் சிந்துஜா, வேளாண்மை அலுவலர் தரக்கட்டுப்பாடு அருள்மாறன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு, மாவட்டத்தில் உள்ள அனைத்து உரம் வழங்கும் கம்பெனிகள் மொத்த விற்பனையாளர்களுக்கு உரங்களை வழங்கும்போது அதன் விவரத்தை வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். அதேபோல் மொத்த விற்பனையாளர்கள் சில்லரை விற்பனையாளர்களுக்கு உரங்களை வழங்கும் போது அதன் விவரங்களையும் வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்திற்கு தர வேண்டும். அது மட்டுமல்லாமல் சில்லறை விற்பனையாளர்கள் மானிய விலையில் உள்ள உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் போது ரசீதில் அவர்களது முகவரியுடன் தொலைபேசி எண் கட்டாயம் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார், மற்றும் உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரி உடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயியின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.



உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்,

உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால், புதிதாக வரும் உர மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும். பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும். உரம் மூட்டையில் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக்கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு விவசாயிக்கு வழங்கக் கூடாது, நானோ யூரியா, நானோ டிஏபி விவசாயிகளுக்கு எடுத்து கூறி பயன்படுத்த வேண்டும், வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.

வேளாண்மை இணை இயக்குனர் உலகம்மை முருகக்கனி, மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனையாளர்கள் விவசாயிகளுக்கு அவர்களின் நிலத்திற்கு ஏற்ப மட்டுமே உரங்கள் விநியோகிக்க வேண்டும். அதிகபட்சமாக உரங்கள் விநியோகிக்க கூடாது மற்றும் உரங்கள் விநியோகிக்கும் போது பில் கொடுக்கும் போது விவசாயி களின் விவரங்களை இடம் பெற வேண்டும் என்று கூறினார். இறுதியாக வேளாண்மை அலுவலர் தர கட்டுப்பாடு அருள்மாறன் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் விவசாயிகள் பண்ணைப்பள்ளி




சேலம், ஜுன் 1

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகள் பண்ணை பள்ளியானது உளுந்து பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் சுக்கம்பட்டி கிராமத்தில் அயோத்தியாப்பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, தலைமையில் நடைபெற்றது. உதவி தொழில் நுட்ப மேலாளர் தமிழ்ச்செல்வி அனைத்து விவசாயிகளையும் வரவேற்று, பண்ணைப்பள்ளி குறித்து விளக்கம் அளித்தார்.

இதில் தர்மபுரி மாவட்ட மரபு வழி இயற்கை பண்ணை ஆசிரியர் சஞ்சீவி பெருமாள், கலந்து கொண்டு விவசாயிகள் மண் மற்றும் நீர் மாதிரி எடுப்பதின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்து, மண் மாதிரி எடுத்தல் குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார். இரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களான பஞ்சகாவியா, நீர் மோர் கரைசல், மீன் அமிலம் பயன்படுத்துதல் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்து இயற்கை உரங்களை பயன்படுத்த அறிவுறுத்தினார்.

தங்க தாமரை நிறுவன செயலாளர் செல்வராஜ், தரமான விதை மற்றும் விதை நேர்த்தி செய்வது குறித்து விளக்கம் அளித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா, விவசாயிகள் அடையாள எண் செய்வதன் முக்கியத்துவம் குறித்தும், சொட்டுநீர் பாசனம், கோடை உழவு, அடி உரம் இடுவதன் அவசியம் ஆகியவை குறித்து எடுத்துரைத்தார்.

துணை வேளாண்மை அலுவலர் பிரபாகரன், வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மாநில விபரங்கள் எடுத்துரைத்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் செல்வி, உளுந்து சாகுபடிக்கு ஏற்ற பருவம், தரமான விதை தேர்வு, உயிர் உர விதை நேர்த்தி செய்து விதைப்பது குறித்து விளக்கம் அளித்தார்.

இப்பயிற்சியில் 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்களான செல்வி மற்றும் தமிழ்ச்செல்வி ஆகியோர் செய்து இருந்தனர்.

# தென்னையில் முதிர்ந்த மரங்களின் மத்தியில் இளங்கன்றுகளை நடுதல் – ஒரு பார்வை

தென்னையில் முதிர்ந்த மரங்களின் மத்தியில் இளங் கன்றுகளை நடுதல் ஆரம்ப காலத்தில் குறைந்த அளவே காய்கள் காய்க்கும் தன்மை பெற்ற தென்னை மரங்கள், எட்டு முதல் பனிரெண்டு வருட வளர்ச்சிக்குப்பின் அதிக எண்ணிக் கையில் காய்களை உற்பத்தி செய்வதோடு காய்க்கும் தன்மை தொடர்ந்து ஒரே சீராகவும் இருக்கின்றது. இந்த நிலை 35-45 ஆண்டுகள் வரை தொடர்கின்றது. தென்னை மரம் 45 அல்லது 50 ஆண்டுகள் முதிர்ந்து வளர்ந்த பின்பு அதன் குலைகளில் காணப்படும் காய்களின் எண்ணிக்கையில் சிறிய சரிவு ஏற்படுவதைக்கான முடிகின்றது. மரம் 60 வயதைத் தாண்டி மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து வளரும்போது காய்களின் எண்ணிக்கை மேலும் குறைவதைக் காணலாம்.


இயற்கையாக ஏற்படும் இந்த நிலைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. முதிர்ந்த பழைய வேர்கள் மற்றும் மரத்தின் தண்டுப்பகுதி, இலை மட்டை ஆகியவற்றில் காணப் படும் திசுக்களில் ஏற்படும் மாற்றங்களே இதற்கான முக்கிய காரணங்களாகும். வயது முதிர்ந்த மரங்களில் விளைச்சல் குறைந்து பொருளாதார சரிவு தோன்ற ஆரம்பிக்கும்போது இம்மரங்களின் அடியில் காணப்படும் இடைவெளிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான இளங்கன்றுகளை நட்டு வளர்ப்பது பலன் தருவதாக அமையும், நன்கு வளர்ச்சியடைந்த மரங் களின் மத்தியில் சூரிய வெளிச்சம் நேரடியாகவும், அதிகமாகவும் கிடைக்கின்றது. அத்துடன் உயரமாக வளர்ந்துவிட்ட மரங்களின் ஓலைகளினுடே தேவையான அளவு சூரிய வெளிச்சம் ஊடுருவி தடையின்றி கிடைக்க வாய்ப்புகள் உள்ளன.

இந்தப் பகுதியில் மண்ணின் அடியில் வேர்களின் அடர்த்தியும், போட்டியும் குறைந்தே காணப்படும். ஆகவே இந்தப் பகுதியைத் தேர்ந்தெடுத்து கன்றுகளை 3’ × 3’ × 3’ அளவுள்ள குழிகளில் நடலாம். இவ்வாறு நன்கு வளர்ச்சி யடைந்த மரங்களின் மத்தியில் ஒன்று வீதம் நடும்போது நடப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கையும் பெரிய மரங்களின் எண்ணிக்கையும் சமமாக அமைகின்றது. உதாரணமாக 400 பெரிய மரங்கள் உள்ள தோப்பில் 400 புதிய கன்றுகள் நட

முடியும். இந்தக் கன்றுகள் வளர்ச்சியடையும்போது வரிசை மாறாத இள மரங்களை உடைய தோப்பு உருவாவதைக் காண முடிகின்றது. ஆனால் இவ்வாறு மரங்களினூடே புதியதாக நடப்பெற்ற கன்றுகளுக்கும் சேர்த்து புதிய அளவில் உரம், தண்ணீர் பாய்ச்சுதல், நோய்க் கட்டுப்பாடு போன்ற ஒரே சீரான பராமரிப்பு முறைகள் தேவைப்படுகின்றது. இவ்வாறு நடப்பட்டு வளர்கின்ற கன்றுகள் சற்று தாமதமாக 6 அல்லது 7 ஆண்டுகளில் காய்க்க ஆரம்பிக்கின்றன.

சுமார் 52 வயதுடைய தென்னந்தோப்பில் இள மரமாக தென்னங்கன்றுகளை நட்டு வளர்க்கும்போது நான்கு ஆண்டுகளுக்குப் பின்பும் பெரிய மரங்களின் விளைச்சல் பாதிக்கவில்லை என கண்டறியப்பட்டுள்ளது. இந்த கால கட்டத்தில் பெரிய மரங்களின் காய்ப்புத்திறன் குறைந்து பொருளாதாரச் சரிவு ஏற்படும் நிலை ஏற்பட்டால் அம்மரங்களை வெட்டி விடுவதன் மூலம் இளம் மரங்கள் நன்றாகக் காய்த்து தொடர்ந்து பலன் கொடுக்கும். இவ்வாறு வளர்ச்சியடைந்த மரங்களின் அடியில் புதிய கன்றுகளை நட்டு வளர்ப்பதன் மூலம் புதிய தோப்பு உருவாகி தொடர்ந்து ஒரே சீரான விளைச்சலும் வருமானமும் கிடைக்க வாய்ப்புகள் உண்டாகின்றன என்று சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தமிழ்நாட்டில் மக்காச்சோளம் உற்பத்தியில் ட்ரோன்களின் பங்கு – ஓர் கண்ணோட்டம்

மக்காச்சோளம் (Zea mays L.) தமிழ்நாட்டின் முக்கிய உணவு மற்றும் தீவனப் பயிர்களில் ஒன்றாகும். சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், ஈரோடு, திருச்சி, பெரம்பலூர், திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் மக்காச்சோளம் பரவலாகப் பயிரிடப்படுகிறது. காலநிலை மாற்றம், தொழிலாளர் பற்றாக் குறை, உற்பத்திச் செலவு உயர்வு போன்ற சவால்களை எதிர் கொள்ளும் இக்காலகட்டத்தில், ட்ரோன் தொழில்நுட்பம் விவசாயத்தில் ஒரு புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. குறிப்பாக மக்காச்சோளம் போன்ற பரந்த நிலப்பரப்புப் பயிர்களில் ட்ரோன்களின் பயன்பாடு உற்பத்தித் திறனை அதிகரிக்க முக்கிய பங்கு வகிக்கிறது.

### 1. ட்ரோன் தொழில்நுட்பம் – விவசாயத்தில் ஒரு அறிமுகம்

ட்ரோன் என்பது மனிதர் இல்லாமல் இயக்கப்படும் சிறிய விமானம் (Unmanned Aerial Vehicle - UAV). விவசாயத்தில் இவை :

- நிலம் கண்காணிப்பு
- விதைப்பு
- உரம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளிப்பு
- பயிர் ஆரோக்கிய மதிப்பீடு

போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

### 2. தமிழ்நாட்டில் மக்காச்சோளம் – பயிர் தன்மை

**மக்காச்சோளம் :**

- குறுகிய கால பயிர்
- பரந்த நிலப்பரப்பில் பயிரிடப்படும்
- துல்லியமான ஊட்டச்சத்து மேலாண்மை தேவைப்படும் பயிர்

இந்தப் பயிர் Precision Agriculture தொழில்நுட்பங்களுக்கு மிகவும் ஏற்றது. இதனால் ட்ரோன்களின் பயன்பாடு அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

**3. மக்காச்சோளம் உற்பத்தியில் ட்ரோன்களின் முக்கிய பங்கு**

**3.1 நிலம் மற்றும் பயிர் கண்காணிப்பு (Crop Monitoring)**

**ட்ரோன்கள் மூலம் :**

- செடி வளர்ச்சி நிலை
- இடைவெளி குறைபாடு
- நீர் அழுத்தம் (Water stress)
- ஊட்டச்சத்து குறைபாடு

ஆகியவை தெளிவாக கண்டறிய முடிகிறது. ஹிம்ாணூா, யூறுாய கேமராக்கள் மூலம் பயிர் ஆரோக்கியம் துல்லியமாக மதிப்பீடு செய்யப்படுகிறது.

**3.2 விதைப்பு மேலாண்மை (Precision Sowing - Emerging use)**

சில முன்னோடி பண்ணைகளில் :

- ட்ரோன் மூலம் துல்லிய விதை விநியோகம்
- சீரான இடைவெளி
- குறைந்த விதை வீணாக்கம்

என்ற நன்மைகள் பெறப்படுகின்றன (தமிழ்நாட்டில் சோதனை நிலை).

**3.3 உரம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளிப்பு**

**மக்காச்சோளத்தில் ட்ரோன்களின் மிக முக்கியமான பயன்பாடு இதுவே.**

**நன்மைகள் :**

- ஒரே நாளில் அதிக பரப்பளவு
- சமச்சீர் (Uniform) தெளிப்பு
- 20-30% வரை மருந்து சேமிப்பு
- தொழிலாளர் செலவு குறைவு
- விவசாயிகளின் உடல்நலம் பாதுகாப்பு

தமிழ்நாட்டில் வீஹிபுஷீ மற்றும் வேளாண்மைத் துறை இந்த தொழில்நுட்பத்தை ஊக்குவித்து வருகின்றன.

**3.4 பூச்சி மற்றும் நோய் மேலாண்மை ட்ரோன்கள் மூலம் :**

- Fall Armyworm போன்ற பூச்சித் தாக்கம் ஆரம்பத்திலேயே கண்டறிதல்

- **பாதிக்கப்பட்ட பகுதிகளில் மட்டும் தெளிப்பு (Spot spraying)**

**இதனால் :**

- மருந்து பயன்பாடு குறைவு
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு

**3.5 நீர் மேலாண்மை மற்றும் வறட்சி கண்காணிப்பு**

**ட்ரோன் படங்களின் மூலம் :**

- நீர் தேவை அதிகமான பகுதிகள்
- நீர் தேக்கம் உள்ள பகுதிகள்

கண்டறிந்து சரியான பாசன மேலாண்மை செய்ய முடிகிறது.

**4. தமிழ்நாட்டில் ட்ரோன் பயன்பாட்டின் தாக்கம்**

**4.1 உற்பத்தி மற்றும் மகசூல் மீது தாக்கம்**

- செடி வளர்ச்சி சீராக்கம்
- கதிர் (Cob) நீளம், எடை அதிகரிப்பு
- 10–20% வரை மகசூல் உயர்வு (புல ஆய்வுகள்)

4.2 பொருளாதார தாக்கம்

- தொழிலாளர் செலவு குறைவு
- உரம், பூச்சிக்கொல்லி சேமிப்பு
- நிகர வருமானம் அதிகரிப்பு

4.3 சுற்றுச்சூழல் தாக்கம்

- ரசாயன மாசுபாடு குறைவு
- மண் மற்றும் நீர் பாதுகாப்பு
- நிலையான வேளாண்மை

5. அரசு முயற்சிகள் மற்றும் தமிழ்நாடு நிலை

- தமிழ்நாடு வேளாண்மைத் துறை
- TNAU - Drone Demonstration Projects
- Subsidy schemes for Agricultural Drones
- Custom Hiring Centres - (CHC) மூலம் ட்ரோன் சேவை

இதனால் சிறு மற்றும் குறு விவசாயிகளும் ட்ரோன் தொழில் நுட்பத்தை பயன்படுத்த முடிகிறது.


**6. சவால்கள் மற்றும் கட்டுப்பாடுகள்**

- தொடக்க முதலீடு அதிகம்
- பயிற்சி பெற்ற இயக்குநர்கள் பற்றாக்குறை

● தொழில்நுட்ப அறிவு குறைவு
● சிறு நிலங்களில் பயன்பாட்டு வரம்பு

**7. எதிர்கால வாய்ப்புகள்**

● AI + Drone இணைப்பு
● Smart farming
● மக்காச்சோளம் போன்ற பரந்த நிலப்பரப்புப் பயிர்களுக்கு முழுமையான Precision Agriculture.




தமிழ்நாட்டில் மக்காச்சோளம் பயிர் உற்பத்தியில் ட்ரோன்கள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக உருவெடுத்து வருகின்றன. துல்லியமான மேலாண்மை, குறைந்த செலவு, அதிக மகசூல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் இந்த தொழில்நுட்பம், எதிர்கால வேளாண்மையின் முக்கிய தூணாக இருக்கும். "ட்ரோன் தொழில்நுட்பம் – தமிழ்நாட்டு மக்காச்சோளத்தின் எதிர்கால வளர்ச்சிப் பாதை."

தகவல் : ***வெங்கடேஷ் ம, உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா.ரா மற்றும் பாமா.ம (இளங்கலை வேளாண் மாணவி), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.***

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இரசாயன உரங்களை முழுக்க முழுக்க நம்பி இருக்கும் விவசாயிகளுக்கு அதிர்ச்சி? மாற்று வழிகள் என்ன?

மத்திய கிழக்காசிய நாடுகளில் நிலவிவரும் போர் பதற்ற சூழ்நிலை காரணமாகவும்,ஹார்முஸ் நீரிணை வழியாக கப்பல் போக்குவரத்து முடக்கப்பட்டுள்ளதால், உலகளாவிய உர






விற்பனை சங்கிலியில் பெரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வெளிநாடுகளிலிருந்து உரத்தை (CHEMICALFERTILIZERS) இறக்குமதி செய்வது தடைபட்டு உள்ளது. இதன் காரணமாக தமிழக டெல்டா மாவட்டம் உட்பட அனைத்து பகுதி யினருக்கும் குறுவை சாகுபடி செய்ய உரம் தேவைப்படுகிறது. இதனால் உரங்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளன. இந்த விலையேற்றத்தால் விவசாயிகள் கடுமையாக அதிர்ச்சியடைந்துள்ளனர்.

**சில உரங்களின் விலை உயர்வு எப்படி?**

1) காம்ப்ளக்ஸ் – 1550 புதிய விலை = 2200
2) பொட்டாஷ் – 1850 புதிய விலை = 2250
3) பாக்டம்பாஸ் – 1200 புதிய விலை = 1400
4) சூப்பர் பாஸ்பேட் – 600 புதிய விலை = 800

சாரசரியாக மூட்டைக்கு 200 முதல் 650 வரை உயர்ந்து உள்ளன. இதுமட்டுமா இதை வாங்கும்போது கூடுதலாக இணை உரங்களை வாங்கிட உரக்கடைக்காரர்கள் கட்டாயப் படுத்துவதாக தகவல்.

**மாற்று வழி இருக்கா?**

முழுக்க முழுக்க இரசாயன உரங்களை நம்பி இருக்கும் விவசாயிகள் படிப்படியாக மாற்று வழிகளை தேடினால் லாபம் கிட்டும். வயலில் ஓடாக உழைத்து ஏற்படும் கஷ்டத்தை இனி படிப்படியாக குறைக்கலாம். அது என்ன என்பதை பார்ப்போம்.

**1) கோடை உழவு (SUMMER PLOUGHING)**

அந்த காலத்தில் நம்முடைய முன்னோர்கள் கோடை பிறந்ததும் கலப்பையும் ஏருமாக உழது கொண்டே இருப்பார்கள், அழுது கொண்டு இருந்தாலும்கூட உழது கொண்டே இரு என்பது பழமொழி. மேலும் 7 உழவு போட்டால் எருது போட வேண்டியதில்லை என்பது கூட உள்ளது. ஆனால் இன்றைய நிலைமை தலைகீழாக உள்ளது. ஓரே உழவு அடுத்து விதைப்பு தான்.

**2) மண்வள அட்டை (SOIL HEALTH CARD)**

மண்வள அட்டை மண்ணின் வளத்தை அறிந்து தழை, மணி, சாம்பல் சத்து களை பரிந்துரைபடி இடுவதால் கணிச மாக செலவு குறையும்.

**3) வண்டல் மண் தெளிப்பு**

கிராமங்களில் கரிசல் நிலத்திற்கு செம்மண் அடிப்பது செம்மண் நிலத்திற்கு கரிசல் மண் அடிப்பது போன்ற பணிகளை மேற்கொள்ளலாம்.

**4) ஊட்டமேற்றிய தொழு உரமிடுதல் (ENRICHED FARM-YARD MANURE)**

மக்கிய தொழு உரத்துடன் டி.விரிடி 2 கிலோ + உயிர் உரங்கள் கலந்து 30 நாட்கள் வைத்து நிலத்திற்கு அடியுரமாக இடலாம்.

**5) உயிர் உரங்களின் பயன்பாடு (BIO FERTILIZERS)**

தழைக்கு அசோஸ்பைரில்லம் + ரைசோபியம், மணி சத்துக்கு பாஸ்போ பேக்டிரியா, சாம்பல் சத்து பொட்டாஷ் பேக்டிரியாவை பயன்படுத்திட வேண்டும்.

**6) கிடை அமர்த்துதல் (LIVESTOCK PENNING)**

ஆட்டு கிடை, மாட்டு கிடை அமர்த்தினால் மண் வளமும் நுண்ணுயிர் பெருக்கமும் உண்டாகும். ஆட்டு எரு அவ்வருடம் மாட்டு எரு மறு வரும் என்ற முதுமொழி வருடத்திற்கு 5-6 நாட்கள் நிலம் முழுவதுமாக கிடை அமர்த்த வேண்டும்.

மற்ற விவசாயிகளுடன் போட்டி போட்டுக்கொண்டு உரமிடும் மன நிலையில் மாற்றம் வேண்டும். இந்த இரசாயன உரங்களின் பயன்பாடு 1970க்கு பின்னர் தான். அன்றைய தினத்தில் மகசூலை அள்ளி அள்ளி கொடுத்த நிலங்கள் இன்று கிள்ளி தருகின்றன. மண்ணில் நுண்ணுயிர்கள் செயல் பாடுகள் நாளுக்கு நாளாக குறைந்து வருகிறது. எனவே மண் உயிரோட்டமாக இருக்க இயற்கை உரங்களை பயன்படுத்திட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
தரச் சான்றிதழ் பேப்பரில் மட்டுமல்ல பைப்பிலும்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
POWERGRID
BHEL
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அரசு மற்றும் தனியார் விதை விற்பனையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை

தஞ்சாவூர், ஜுன் 1

தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்கான விதை ஆய்வு துணை இயக்குனர் சுஜாதா வெளியிட்டுள்ள செய்தி:

விதை சட்டம் 1966 மற்றும் விதை கட்டுப்பாட்டு ஆணை 1985 ஆகியவற்றின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் 816, புதுக்கோட்டை மாவட்டத்தில் 618 ஆக கூடுதல் 1434 உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்கள் உள்ளன.

விதிமுறை மீறல்கள் காணப்படும் விற்பனை நிலையங்களில் உடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் ஜுன் முதல் வாரத்தில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு கண்காணிப்பு குழுவினர் விதை விற்பனை நிலையங்களில் ஆய்வு மேற்கொள்ள உள்ளனர். கடந்த 1.4. 2026 முதல் இதுநாள் வரை 9 விற்பனை தடைகள் மூலம் 5.42 லட்சம் மதிப்பிலான 11800 கிலோ விதைகள் முளைப்புத்திறன் சரியில்லாத காரணத்தினால் விற்பனை தடை செய்யப்பட்டு உள்ளன. இவ்வாறு விற்பனை தடை செய்யப்படும் விதைகள் 'விதையில்லா' பயன்பாட்டிற்கு அனுப்பப்பட்டுவிடும். மேலும் விதை சட்ட விதிமீறல்களுக்காக 4 நீதிமன்ற வழக்குகள் தொடுக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றன.

அரசு மற்றும் தனியார் விதை விற்பனையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை :

தங்களின் விதை விற்பனை உரிமத்தை தங்கள் நிறுவனத்தில் காட்சி படுத்தப்பட வேண்டும். விதைகளின் இருப்பு மற்றும் விலை பட்டியல் முகப்பில் வைத்திட வேண்டும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட சான்ற அட்டை பொருத்திய விதைகளை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.

தனியார் உண்மை நிலை விதைகளுக்கு முளைப்பு திறன் சான்றினை தவறாமல் ஆய்விற்கு காண்பிக்க வேண்டும். தங்கள் விற்பனை நிலையத்திலும் முளைப்பு திறன் பரிசோதனை போட்டிருக்க வேண்டும். விவசாயிகளுக்கு விதை விற்பனைக்கான உரிய ரசீது கொடுக்க வேண்டும். ரசீதில் விவசாயி பெயர், முகவரி ரகம், சான்று நிலை, குவியல் எண்,

காலாவதி நாள், கொடுத்த அளவு போன்றவை கட்டாயம் இடம் பெற வேண்டும். விற்பனையாளர்கள் ஒரு ரகத்தைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளாமல் அதனை விவசாயிகளுக்கு விற்பனை செய்யக்கூடாது. விற்பனை செய்யப்படும் விதைகள் மாவட்டத்திற்கும் உரிய பருவத்திற்கும் ஏற்றதா என உறுதிப்படுத்தப்பட்ட பிறகு தான் விற்பனை செய்ய வேண்டும்.

விதைகளை ரகம் மற்றும் குவியல் எண் வாரியாக ஒரு அட்டியில் ஆறு மூட்டைகள் என்ற வீதத்தில் சுத்தமான இடத்தில் அடுக்கி வைக்க வேண்டும். பூச்சிக்கொல்லிகள், உரங்கள் உள்ளிட்ட ரசாயனங்கள் அருகே விதைகளை சேமித்து வைக்க கூடாது. இருப்பு பதிவேட்டில் இருப்பு கழிக்கப்பட்டு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

# விளைநிலம் பாதுகாப்பு இயக்கம் விழிப்புணர்வு முகாம்

திருச்சி, ஜூன் 1

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஜூன் 1 முதல் ஜூன் 30 வரை விளைநிலம் பாதுகாப்பு இயக்க விழிப்புணர்வு முகாம் நடைபெற உள்ளது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா, அழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 14 வட்டாரத்தில் உள்ள 404 கிராம ஊராட்சிகளிலும் 'விளைநிலம் பாதுகாப்பு இயக்கம்' (கேத் பச்சாவ் அபியான்) திட்டத்தின் கீழ் 01.06.26 முதல் 30.06.26 வரை விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சியில் விவசாயிகளுக்கு மண்வள அட்டை பயன்படுத்துவதன் நோக்கம் குறித்தும், மண்வளத்தினை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது குறித்தும் தொழில்நுட்ப விளக்கங்கள் வழங்கப்படும். மண் வளத்தினை பாதுகாக்க பயிர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உர பயன்பாடு, அங்கக மற்றும் இயற்கை உர பயன்பாடுகள், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் பசுந்தழை பயிர்கள் பயன்பாடு, நுண்ணூட்ட சத்துக்களை எவ்வாறு பயிர்களுக்கு பயன்படுத்துவது, நானோ உரங்கள் பயன்பாடு மற்றும் திரவ உயிர் உரங்கள் பயன்பாடு போன்ற

தொழில்நுட்ப விளக்கங்கள் பயிற்சியில் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

மேலும் செயல்விளக்க முறையில் விவசாயிகளுக்கு செயற்கை உரங்கள், வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் போன்றவற்றை பயன்படுத்தாமல் எவ்வாறு இயற்கை வேளாண்மை செய்வது போன்ற தகவல்கள் வழங்கப்படும். மேலும் இப்பயிற்சியில் ஆரோக்கியமான உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் அதிகப்படியான சமையல் எண்ணெய் நுகர்வினை எவ்வாறு குறைத்து சரி விகித உணவு முறையினை தினசரி உணவு பழக்க வழக்கத்தில் பின்பற்றுவது போன்ற தகவல்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். பயிற்சியில் வேளாண்மைத் துறை அலுவலர்கள் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொள்வதால் விவசாயிகள் அனைவரும் கலந்து கொண்டு தங்கள் விவசாய சம்மந்தமான சந்தேகங்களை கேட்டு தகவல்களை பெற்று கொள்ளலாம். மேலும் இப்பயிற்சியில் அனைத்து விவசாயிகளும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என திருச்சிராப்பள்ளி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா தெரிவித்துள்ளார்.

# நிலக்கடலையில் சமச்சீர் உர மேலாண்மை பற்றிய பயிற்சி

திருச்சி, ஜுன் 1



திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் சமச்சீர் உர பயன்பாடு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அவ்வப்போது விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, மண்பறை கிராமத்தில் நிலக்கடலை பயிரில் சமச்சீர் உர பயன்பாடு பற்றிய பயிற்சி விவசாயிகளுக்கு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், நிலக்கடலையில் விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் உயிர் உரம் கொண்டு விதை நேர்த்தி செய்யும் வழிமுறைகள் குறித்து விளக்கினார்.

பயிர் நோயியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் கண்ணன், விவசாயிகள் மண்ணின் வளத்தை ஆய்வு செய்து, மண்வளத்திற்கு ஏற்ப உரமிட வேண்டும் என அறிவுறுத்தினார். உழவியல் துறை இணை பேராசிரியர் முனைவர் ராதிகா, ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை, ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும் எனவும், அங்கக இடுபொருள்களான மண்புழு உரம் மற்றும் உயிர் உரங்கள் போன்றவற்றை விவசாயிகள் பயன்படுத்துவதன் மூலம் பயிர் விளைச்சல் மேம்பாட்டுடன் மண்வளத்தையும் பாதுகாக்க முடியும் எனவும் ஆலோசனை வழங்கினார். இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# பெருந்துறை வட்டாரத்தில் பருத்தி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பயிற்சி



ஈரோடு, ஜூன் 1

ஈரோடு வட்டாரம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை – உழவர் நலத்துறை கீழ், செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் நிச்சாம்பாளையம் வருவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு பருத்தி பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த தொழில்நுட்ப பயிற்சி பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சா.கலைச்செல்வி தலைமையில் நடைபெற்றது.

அப்போது வேளாண் உதவி இயக்குநர் பேசுகையில், பருத்தி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் குறித்தும் அவற்றை கட்டுப்படுத்தும் முறை குறித்தும் தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் மானிய விவரங்கள் பற்றியும் தெளிவாக விளக்கினார். மேலும் வேளாண் அறிவியல் நிலையத்தை சார்ந்த பிரேமலதா பேசுகையில் மண் பரிசோதனை மூலம் உர மேலாண்மை மேற்கொள்வதன் அவசியம் குறித்தும் ஒவ்வொரு பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு அதன் அடிப்படையில் உரமிடவேண்டும் என்பதை வலியுறுத்தி கூறினார். இதன் மூலம் இரசாயன உரங்களின் பயன்பாடுகளை குறைக்க முடியும் என்பதை பற்றியும் மேலும் பருத்தி பயிர்களில் முக்கிய பூச்சிகள் மற்றும் நன்மை பயக்கும் நுண்ணுயிரிகளை அடையாளம் காணுதல், மேலாண்மை அலகு மற்றும் சுற்றுச்சூழல் வரையறுத்தல் பொருளாதார வரம்புகளை உருவாக்குதல், பூச்சி மாதிரிகளை உருவாக்குதல், மற்றும் மேலாண்மை முறைகளின் நோக்கங்கள் பற்றி கூறினார். இயற்கை விவசாயி கணேசன், பேசுகையில் பூச்சி விரட்டி, பஞ்சகாவியம் தயாரித்தல் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர். உதவி தோட்டக்கலை அலுவலர் பார்த்திபன் பேசுகையில், உழவர் அடையாள எண் பெறுவதற்கு தேவைப்படும் ஆவணங்கள் மற்றும் அதன் பயன்கள் பற்றியும் கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# பயறு வகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



அரியலூர், ஜூன் 1

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின் கீழ் பயறுவகைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த மாவட்டஅளவிலான விவசாயிகள் பயிற்சி ஆமணக்கந் தோண்டி கிராமத்தில் வட்டார வேளாண் உதவி இயக்குநர் (பொ) மகேந்திரவர்மன் தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில் விவசாயிகள் அனைவரும் வேளாண் துறை மற்றும் சகோதரத் துறைகளின் திட்டங்களைப் பெற்று பயனடைய விவசாயிகள் தனித்துவ அடையாள எண் பெற வேண்டியது அவசியம் எனவும் விவசாயிகள் சாகுபடியின் போது மண்ஆய்வு செய்து பயிருக்குத் தேவையான அளவு உரங்களை மட்டும் இட்டு சாகுபடி செலவைக் குறைத்து மண் வளத்தைப் பாதுகாத்து குறைந்த செலவில் அதிக மகசூல் பெறும் தொழில்நுட்பங்களை விளக்கினார். கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர் திருமலைவாசன் பயறுவகைப் பயிர்கள் சாகுபடியில் டி.விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்தல், நீர் நிர்வாகம், களை நிர்வாகம், உர நிர்வாகம், 20 சத மகசூல் அதிகரிக்க பயறு ஒண்டர் தெளிக்கும் முறை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் கட்டுப்பாட்டுமுறைகளை விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். நிலக்கடலை மற்றும் மக்காச்சோள சாகுபடியில் வரப்புப் பயிராக உளுந்து சாகுபடி செய்வது பிரதானப் பயிரில் பூச்சி தாக்குதலைக் குறைக்கும் எனவும் உபரி மகசூல் கிடைக்கும் எனவும் தெரிவித்தார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் கோடை உழவின் நன்மைகள் மற்றும் மண் ஆய்வு செய்து உரமிடுதலின் அவசியம் குறித்தும் விளக்கினார்.

உதவிதொழில் நுட்பமேலாளர் ஆரோக்கியராஜ், உழவன் செயலி குறித்து விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ்குமார், பிரதம மந்திரி கவுரவ நிதி உதவித் திட்டம் குறித்து விளக்கி நன்றி கூறினார். ஆமணக்கந்தோண்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள், பண்ணை மகளிர் பெருந்திரளாகப் பயிற்சியில் கலந்து கொண்டனர்.



Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
LMW
isha
Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
POWERGRID
BHEL
Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# 1876-1878 இந்தியப் பஞ்சம் மற்றும் 2026 எல் நினோ – ஒரு விரிவான ஆய்வு

'வரலாறு மறுபடியும் நடக்காமல் தடுக்க,

முதலில் அதை நாம் நேர்மையாக புரிந்துகொள்ள வேண்டும்.' என்பதை – Mike Davis, Late Victorian Holocausts (2001) கூறுகிறார்.

**1. எல் நினோ என்றால் என்ன?**

எல் நினோ (El Niño) என்பது பசிபிக் கடலின் நடு-கிழக்குப் பகுதியில் கடல் நீரின் வெப்பநிலை அசாதாரணமாக உயரும் ஒரு தட்பவெப்ப நிகழ்வு. இது ENSO (El Niño Southern Oscillation) சுழற்சியின் ஒரு பகுதி. இந்த நிகழ்வு உலகின் பல்வேறு பகுதிகளில் மழைப் பொய்ப்பு, வறட்சி, வெள்ளம் ஆகிய தீவிர வானிலை மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

**இந்தியாவில் எல் நினோவின் தாக்கம்**

- தென்மேற்கு பருவமழை (ஜூன் – செப்டம்பர்) பலவீனமாக உள்ளது
- கிழக்கு, மத்திய இந்தியாவில் கடுமையான வறட்சி
- கிரிக்கெட் பகுதிகளில் (Kharif) விளைச்சல் சரிவு
- உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு
- வெப்ப அலை (Heat Wave) நீடிக்கும்

**வரலாற்று எல் நினோ**

**இந்தியத் தொடர்பு**

1876-1878 : சூப்பர் எல் நினோ – வரலாற்றின் மிக மோசமான பஞ்சம் .

1899-1900 : கடுமையான எல் நினோ – 1 மில்லியன் மரணம்

1972-1973 : எல் நினோ– தீவிர வறட்சி, உணவு நெருக்கடி.

1997-1998 : சூப்பர் எல் நினோ – பல மாநிலங்களில் வறட்சி

2015-2016 : கடுமையான எல் நினோ – வறட்சி, விவசாய இழப்பு

2026 : சாத்தியமான சூப்பர் எல் நினோ – ஞானிம் எச்சரிக்கை (35% குறைவான மழை வாய்ப்பு)

**2. 1876-1878 : வரலாற்றின் இரத்தக் கண்ணீர்**

**2.1 பஞ்சத்தின் தோற்றம் – இயற்கையின் பங்கு**

1876 ஆம் ஆண்டு தென்மேற்கு பருவமழை கேரளம், தமிழகம்,

கர்நாடகம் (மைசூர்), ஆந்திரப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா பகுதிகளில் மொத்தமாக தோல்வியடைந்தது. 1877 ஆம் ஆண்டும் மழை மறுபடியும் பொய்த்தது. இந்த இரட்டை வறட்சி மட்டுமே கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை நாசமாக்கியது.

**புள்ளி விபரங்கள்**

பாதிக்கப்பட்ட மாகாணங்கள் சென்னை, மும்பை, மைசூர், ஹைதராபாத், டெக்கான் பீடபூமி மொத்த பாதிக்கப்பட்டோர் 30 – 58 மில்லியன் மக்கள் இறப்பு மதிப்பீடு 5.6 – 9.6 மில்லியன் (நவீன மதிப்பீடு: 8.2 மில்லியன்). பஞ்சம் நீடித்த காலம் 1876 – 1878 (இரண்டு ஆண்டுகள்) மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் பெல்லாரி, குர்னூல், கடப்பா, சேலம், கோயம்புத்தூர், பிஜாப்பூர் ஆகியன குறிப்பிடத்தக்கது.

1876 ஆம் ஆண்டு பசிபிக் கடலில் ஏற்பட்ட சக்திவாய்ந்த எல் நினோ நிகழ்வு இந்தியா மட்டுமல்ல, சீனா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா என உலகெங்கும் வறட்சியை ஏற்படுத்தியது. உலக அளவில் 19 முதல் 50 மில்லியன் வரையிலான மரணங்கள் இந்த ஒரே எல் நினோ நிகழ்வால் ஏற்பட்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

**2.2 காலனித்துவக் கொள்கை – மனிதனால் உருவான பேரழிவு**

உணவு ஏற்றுமதி தொடர்ந்தது – மக்கள் பட்டினியில் இறந்தனர். மிகவும் அதிர்ச்சியூட்டும் உண்மை என்னவெனில், பஞ்சம் நடந்த காலத்திலேயே இந்தியாவிலிருந்து தானியங்கள் ஏற்றுமதி தொடர்ந்தது. வைசிராய் லார்ட் லிட்டன் நிர்வாகத்தின் கீழ், 1875–1878க்கு இடையில் 6.4 மில்லியன் ஹன்ட்ரெட்வெயிட் (சுமார் 3,20,000 டன்) கோதுமை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

**வரலாற்றாசிரியர் Mike Davis (Late Victorian Holocausts) கூற்று :**

‘இந்தியா உணவு தட்டுப்பாடால் பஞ்சமடையவில்லை. உணவு இருந்தது, ஆனால் அதை மக்கள் அணுக முடியவில்லை. ஏனெனில் தானியங்கள் சந்தை விலையில் ஏற்றுமதி செய்யப் பட்டன, இலவசமாக வழங்கப்படவில்லை.

Ryotwari வரி முறை – விவசாயி நலிந்தான்

ராயட்வாரி முறையின் கீழ், மழை வறண்டாலும் சரி – கடுமையான விளைச்சல் இல்லாவிட்டாலும் சரி – நிலவரி தவறாது வசூலிக்கப் பட்டது.

தங்களிடம் உள்ள தானியங்களையும் வரி கட்ட விற்ற விவசாயிகள், மழை இல்லாத காலத்தில் கையிருப்பு இல்லாமல்

போனார்கள். கடன் சுமை அதிகரித்தது. நிலங்கள் பறிக்கப்பட்டன.

- நிலவரி : பஞ்ச காலத்திலும் வசூல் நிறுத்தப்படவில்லை
- விளைச்சல் இல்லாவிட்டாலும் 'fixed demand' வரி நடைமுறை
- பல விவசாயிகள் சொத்துக்களை விற்று கடன் வாங்கினர்
- நிலமற்ற தொழிலாளர்கள் முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டனர்

### Laissez-Faire கொள்கை – சந்தையே தெய்வம்

பிரிட்டிஷ் அரசு கண்மூடித்தனமான 'சுதந்திர சந்தை' கொள் கையை பின்பற்றியது. அரசு தலையிடக்கூடாது, சந்தையே தீர்வு காணும் என்ற நம்பிக்கையில், தானிய விலைகள் சாமானிய மக்களுக்கு எட்டாத அளவுக்கு உயர்ந்தும் அரசு ஒன்றும் செய்யவில்லை. உணவு இருந்தது – ஆனால் வாங்கும் சக்தி இல்லாததால் மக்கள் மடிந்தனர்.

### 2.3 'டெம்பிள் கூலி' – கட்டாய உழைப்பு முகாம்கள்

சர் ரிச்சர்ட் டெம்பிள் (Sir Richard Temple), பஞ்ச நிவாரண ஆணையர் ஆக நியமிக்கப்பட்டார். அவர் செயல்முறை மிகவும் கொடூரமானதாக இருந்தது:

- நிவாரண முகாம்களில் உணவு பெற, கடுமையான உழைப்பு கட்டாயம்
- ரோடு கட்டுவது, ரயில் பாதை அமைப்பு, பாறை உடைப்பு – பட்டினியில் இருக்கும் மக்களே செய்தனர்
- ஒரு நாள் உழைப்புக்கு 1,600 கலோரி மட்டும் – உயிர் வாழ்வதற்கும் போதாத அளவு
- 'டெம்பிள் கூலி' என்று அழைக்கப்பட்ட இந்த ஊதிய முறை டாக்டர் நி.யூ. Cornish போன்ற மருத்துவர்களால் தீவிரமாக எதிர்க்கப்பட்டது
- 'இலவசமாக உணவு கொடுத்தால் மக்கள் சோம்பேறியாகி விடுவார்கள்' – இதுதான் டெம்பிளின் நியாயம்

### சாட்சியம் : William Digby (1878)

'கடப்பா மாவட்டத்தில், நூற்றுக்கணக்கான மனிதர்கள் தரையில் படுத்திருந்தனர் – கைகால்கள் அசைக்கவும் முடியாத அளவுக்கு சோர்ந்திருந்தனர், கண்கள் மரத்துப் போயிருந்தன. இவர்களிடம் உழைப்பு கேட்பது மனித நீதிக்கு எதிரானது.'

### 2.4 டெல்லி தர்பார் – உண்மையான முகம்

பஞ்சம் உச்சத்தில் இருந்த 1877 ஜனவரி மாதம், வைசிராய் லார்ட் லிட்டன் டெல்லியில் ஒரு மகத்தான தர்பார் (Delhi Durbar) ஏற்பாடு

செய்தார். விக்டோரியா மகாராணியை இந்தியா மகாராணி (Empress of India) என்று பிரகடனம் செய்ய, பல கோடி ரூபாய் செலவில் கொண்டாட்டங்கள் நடந்தன. அதே நேரத்தில் தென் இந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் தினந்தோறும் பட்டினி யால் மாண்டனர்.

3. மரண புள்ளி விவரங்கள் – வரலாற்றாசிரியர்களின் மதிப்பீடு மற்றும் ஆய்வாளர் / ஆதாரம் மரண மதிப்பீடு விபரம்.

தகவல் : ***கோவில்பட்டி கோ.சுரேஷ்குமார். வேளாண் கல்வி விழிப்புணர்வு செயல்பாட்டாளர்.***

***நாளை தொடரும்...***

